உ

இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில்

**பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம்,**

**திருவள்ளூர் மாவட்டம் – 601102.**

தொலைபேசி : 27927177, கைபேசி : 9444 487 487.

மின்னஞ்சல் முகவரி : periyapalayambhavaniamman@gmail.com

**ITMS : 1642**

## வேலைவாய்ப்பு விளம்பர அறிவிப்பு

**ந.க.எண். 1667 / பசலி 1433 / நாள் 08.05.2025**

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம், அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயிலின் மருத்துவ மையத்தில் மருத்துவ அலுவலர் பதவியில், ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்காக கீழ்கண்ட விவரப்படியான காலிப்பணியிடத்திற்கு, தகுதியுள்ள, இந்து சமயத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து **12.06.2025 மாலை 5.45 மணி வரை** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அதற்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதர விபரங்களை திருக்கோயில் அலுவலகத்தில், அலுவலக நாட்களில், அலுவலக நேரங்களில், நேரில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | பதவியின் பெயர் | பதவிகள் | வயது | கல்வித்தகுதி | ஒப்பந்த ஊதியம் |
|---|---|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் (Medical Officer) | 1 | 01.07.2024 அன்று 35 வயது பூர்த்தியடைந்தவராக இருக்கக்கூடாது | MBBS (Qualified) Registered under TNMC | ரூ. 60,000/- |

## நிபந்தனைகள்

1. இந்து மதத்தை சார்ந்தவராகவும், தமிழ்நாட்டை சார்ந்தவராகவும் இருக்க வேண்டும்.

2. தொற்று நோய் உடல் அல்லது மனநிலை குன்றிய குறைபாடுகள், நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள், அரசு பணிகள், பொது ஸ்தாபனங்கள் மற்றும் வேறு இடங்களில் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் ஆகியோர் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

3. திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமித்து, அனுபவித்து வருபவர்கள், திருக்கோயிலுக்கு பாக்கி வைத்துள்ளவர்கள், திருக்கோயிலுக்கு இழப்பு ஏற்படுத்தியவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

4. விண்ணப்பதாரர் நன்கு ஆரோக்கியமான உடல் நிலையுடன், தீய பழக்க வழக்கங்கள் மற்றும் தொற்று நோயற்றவர் என்றும், நல்ல மன நிலை உடையவர் என்பதற்கான விவரங்கள் குறிப்பிட்டு அரசு மருத்துவர் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

..2..

5. நன்னடத்தை உடயவராக இருக்க வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவு பெற்ற அரசு உயரதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தை சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரர்கள் மருத்துவ அலுவலர் பதவிக்குரிய கல்வி மற்றும் இதர தகுதி சான்றுகள் மற்றும் இதர விவரங்களுடன் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

7. விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.

8. வரப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முகத்தேர்வுக்கு அறிவிப்பு அனுப்பப்படும்.

9. விண்ணப்பதாரர்கள் நேர்காணல் நடைபெறும் நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக, உரிய அசல் சான்றிதழ்களுடன் தமது சொந்த செலவில் நேரில் ஆஜராக வேண்டும். நேர்முக தேர்வில் கலந்துக்கொள்வதற்கு எவ்வித பயணப்படியும் வழங்கப்படமாட்டாது.

10. விண்ணப்பதாரர் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்.

11. விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்துச் சான்றிதழ்களும் அரசு பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்பட நகல்களாக மட்டுமே இருக்க வேண்டும். அசல் சான்றிதழ்கள் அனுப்பக்கூடாது.

12. விண்ணப்பங்கள் **செயல் அலுவலர், அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில், பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண்** 601102 என்ற பெயரில் பதிவுத் தபாலில் **12.06.2025ம் தேதி மாலை 5.45 மணிக்குள்** திருக்கோயில் அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பப்பட வேண்டும். தபால் மூலம் ஏற்படும் காலதாமதத்திற்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.

13. இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும், 12.06.2025ம் தேதி 5.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

14. தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

15. ராஜீகத்தாலும் தெய்வீகத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

16. விண்ணப்பங்களுக்கு கட்டணம் கிடையாது. **10.06.2025 ம் தேதி மாலை 5.45 மணிவரையில்**, விண்ணப்பங்கள் மற்றும் இதர நிபந்தனைகளை நேரிலோ அல்லது www.omsribhavaniammantempleperiyapalayam.org என்ற திருக்கோயில் இணையதளத்திலும், http://hrce.tn.gov.in என்கிற இணையதள முகவரியில் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில் என்கிற பெயரில் உள்ள பக்கத்தில் ஆன்லைன் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

17. விண்ணப்பத்தில் உரிய தகவல்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும், தேவையான சான்றுகள் இணைக்கப்படாமலும் வரப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித பரிசீலனைக்கும் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

18. விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் தவறானவை என எதிர்காலத்தில் கண்டறியப்பட்டால் அவர்களின் ஒப்பந்த நியமனம் ரத்து செய்யப்படுவதுடன் நம்பிக்கை மோசடி அடிப்படையில் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும்.

19. இந்த ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் தொடர்பான நடைமுறைகள் யாவும், இந்து சமய அறநிலையத்துறை சட்டவிதிகளுக்குட்பட்டதாகும்.

இங்ஙனம்.

து. ரு. பிரகாஷ்,
செயல் அலுவலர்.

அஞ்சன் லோகமித்ரா,
பரம்பரை அறங்காவலர்.

உ

இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில்

பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம்,

திருவள்ளூர் மாவட்டம் – 601102.

தொலைபேசி : 27927177, கைபேசி : 9444 487 487.

மின்னஞ்சல் முகவரி : periyapalayambhavaniamman@gmail.com

ITMS : 1642

---

## விண்ணப்ப படிவம்

### விண்ணப்பிக்கும் பணியிடத்திற்கான பெயர்

## மருத்துவ அலுவலர்

புகைப்படம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் (முழுப்பெயர்) | | |
| 2. | தந்தை / கணவர் / பாதுகாவலர் பெயர் | | |
| 3. | நிலையான முகவரி (சான்று இணைக்கப்பட வேண்டும்) | | |
| 4. | 12 இலக்க ஆதார் அட்டை எண் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | | |
| 5. | பாலினம் (ஆண் / பெண்) | | |
| 6. | திருமணம் ஆனவரா? | | |

| | | | |
|---|---|---|---|
| 7. | சாதி மற்றும் மதம் (சான்று இணைக்கப்படவேண்டும்) | | |
| 8. | பிறந்த தேதி மற்றும் வயது (35 வயதுக்கு மிகாதவர்கள் – சான்று இணைக்கப்பட வேண்டும்) | | |
| 9. | கல்வித்தகுதி (சான்று இணைக்கப்பட வேண்டும்) | | |
| 10. | தொழில்நுட்ப தகுதிகள் உள்ளிட்ட பிற தகுதிகள் (சான்று இணைக்கப்படவேண்டும்) | | |
| 11. | இதர தகுதிகள் ஏதும் இருப்பின் அதன் விபரம் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | | |
| 12 | விண்ணப்பிக்கும் பணியில் முன் அனுபவம் இருப்பின் அதன் விபரம், பிற நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவர் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | | |
| 13 | இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையின் கீழ் உள்ள திருக்கோயில் பணியாளர் எனில் அதன் விபரம் | | |
| | அ) பெயர் | | |
| | ஆ) தந்தை / கணவர் பெயர் | | |

| | | | |
|---|---|---|---|
| | இ) பதவி | | |
| | ஈ) பணியில் சேர்ந்த நாள் | | |
| | உ) பணிபுரியும் திருக்கோயில் | | |
| | ஊ) பணிபுரிந்து வருவதற்கான சான்று | | |
| | எ) நன்னடத்தை சான்று | | |
| 14 | நன்னடத்தை சான்று | | |
| | அ) இறுதியாக பயின்ற பள்ளி / கல்லூரியில் பெறப்பட்ட நன்னடத்தை சான்று. (நகல் இணைக்கப்பட வேண்டும்) | | |
| | ஆ) அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் 01.05.2025 க்கு பின்னர் பெறப்பட்ட நன்னடத்தை சான்று (நகல் இணைக்கப்பட வேண்டும்) | | |
| 15 | குற்றவியல் நடவடிக்கை இருப்பின் அதன் விவரம் | | |
| | அ) பதிவு செய்யப்பட்டுள்ளதா? | | ஆம் / இல்லை |
| | ஆ) நிலுவையிலுள்ளதா? | | ஆம் / இல்லை |
| | இ) தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? | | ஆம் / இல்லை |

| | | | |
|---|---|---|---|
| 16 | தமிழ்நாடு காவல்துறை மூலம் பெறப்பட்ட Police Verification Report (நகல் இணைக்கப்பட வேண்டும்) | | |
| 17 | தொலைபேசி எண் | | |
| 18. | கைபேசி எண் | | |
| 19 | மின்னஞ்சல் முகவரி | | |

**உறுதி மொழி**

______________________________ தந்தை / கணவர் / பாதுகாவலர் பெயர் ____________________________________ ஆகிய நான், இவ்விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்காணும் அனைத்து தகவல்களும், இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களும் சரியானவை என உறுதி கூறுகிறேன். எதிர்காலத்தில் மேற்படி தகவல்கள் தவறானவை எனவும், இணைக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனவும் தெரியவந்தால், என் மீது, திருக்கோயில் நிர்வாகத்தால் நடவடிக்கை மேற்கொண்டு, எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்யவும், குற்றவியல் நடவடிக்கைகளுக்கு கட்டுப்படவும் சம்மதித்து உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரர் கையொபப்பம்.

நாள் : ____________________

இடம் : ____________________